செ.வெ.எண். 17/ஜூன் தேதி : 06.06.2016

## பத்திரிக்கைச் செய்தி

## தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.




ஜூன்-12, சர்வதேச குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தருமபுரி மாவட்டத்தில் ஒருவார கால விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

தருமபுரி மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க மத்திய அரசின் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்கு கல்வி, பாடப்புத்தகங்கள், தொழிற்பயிற்சி, மதிய உணவு, சீருடை, பேருந்து பயணச்சீட்டு, மருத்துவ பரிசோதனை, விடுதி மற்றும் மாத ஊக்கத்தொகை ரூ. 150/- ஆகிய அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது. மேலும் பட்டப்படிப்பு படிக்கும் இத்திட்ட சிறார்களுக்கு 2011ம் வருடம் முதல் மாதம் ரூ. 500/- மாநில அரசு வழங்குகிறது.

தற்பொழுது, தருமபுரி மாவட்டத்தில் 22 சிறப்புப் பயிற்சி மையங்களில் 700 சிறார்கள் கல்வி பயின்று வருகின்றனர். இதுவரை இத்திட்டத்தின் மூலம் 15843 சிறார்கள் பல்வேறு தொழில்களில் இருந்து மீட்கப்பட்டு 2 ஆண்டு சிறப்புப் பயிற்சி அளித்து முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்ட முன்னாள் மாணவ/மாணவியர், 2015-16-ம் ஆண்டு 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய 41 மாணவர்களில் 32 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் தருமபுரி மாவட்டத்தை சார்ந்த P. சிவா, 1148 மதிப்பெண்கள் பெற்று இத்திட்ட சிறார்களில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளார். 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய 35 மாணவர்களில் 32 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் தருமபுரி மாவட்டத்தை சார்ந்த M. வருண்குமார் 446 மதிப்பெண்கள் பெற்று இத்திட்ட சிறார்களில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளார். மேலும், இத்திட்ட முன்னாள் மாணவர் எம்.மூர்த்தி மற்றும் வி.கார்த்திக் மருத்துவ பட்டம், சட்டபடிப்பு-1, பொறியியல்-17, இளங்கலை-99, டிப்ளமோ-28, இளங்கலை (வேளாண்மை)-2, இளங்கலை செவிலியர்-1 என 150 மாணவர்கள் உயர்கல்வி பயின்று வருகின்றனர்.

ஜுன்-12, "சர்வதேச குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக" கடைபிடிக்கப்படுகிறது. தருமபுரி ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்களின் உத்திரவின்படி, தருமபுரி மாவட்டத்தில் 06.06.2016 முதல் 12.06.2016 வரை குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் 06.06.2016 தருமபுரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை துவங்கி வைத்தார். இதனை தொடர்ந்து பென்னாகரம், பாலக்கோடு, காரிமங்கலம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, காரிமங்கலம், நல்லம்பள்ளி, தருமபுரி ஆகிய ஒன்றியங்களில் 06.06.2016 முதல் 12.06.2016 வரை விழிப்புணர்வு நாடகங்கள் மற்றும் கையெழுத்து இயக்கங்கள் நடைபெற உள்ளது.

**07.06.2016 & 10.06.2016 அன்று**

குழந்தைத்தொழிலாளர் முறை (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1986-ன் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆய்வாளர்கள் அடங்கிய குழுக்களை கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

**10.06.2016 அன்று**

அனைத்து அரசு நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் "குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பில் எனது கடமை" மற்றும் "குழந்தைகள் உரிமைகள்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடைபெற உள்ளது. மேலும்,

காலை 11.00 மணிக்கு அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் காலை 11.00 மணிக்கு குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் உறுதிமொழி எடுத்தலும், காலை 11.15 மணிக்கு 10 மற்றும் 12ம் வகுப்பில் சிறப்பிடம் பெற்ற முன்னாள் குழந்தைத் தொழிலாளர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசு வழங்கும் உதவித்தொகை மற்றும் சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் சிறார்களுக்கு தமிழக அரசு வழங்கும் விலையில்லா கல்வி பொருட்களை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் நிகழ்ச்சிகளில், முதல் நிகழ்ச்சியாக 06.06.2016 குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் **"குழந்தைத் தொழிலாளர் எவரையும் பணியில் அமர்த்த மாட்டேன். குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட பாடுபடுவேன். குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்தி தயார் செய்யும் எந்தவொரு பொருட்களையும் உபயோகப்படுத்த மாட்டேன்"** என்று உறுதியேற்று கையெழுத்து இட்டு துவங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் ந.சரவணன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் திரு. கே.இராமமூர்த்தி, இத்திட்ட பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டு கையெழுத்து இட்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.